**இலங்கை கிரிக்கெட் – 2017**

------------------------------------------------------------

இலங்கை கிரிக்கெட்டின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியமாற்றங்களிற்கான விரிவான வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுகள் அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் இலங்கை கிரிக்கெட்டின் செயற்பாடுகள் தொடர்பாக எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான நிறைவேற்று குழுவின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிறைவேற்றுக் குழு நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு நிறைவேற்றுக் குழு பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி இலங்கை கிரிக்கெட்டின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. நிறைவேற்றுக் குழுவினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் நிறைவேற்றுக் குழுவால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ்க்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களினுடைய உப பிரிவு 3.17(இ) உறுப்புரையின்படி உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று / அறிக்கையிடும் காலப்பகுதிக்கான தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) ஏனைய கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,213,944,841 பெறுமதியானது மகிந்த ராஜபக்ச சர்வதேச கிரிகெட் விளையாட்டு அரங்கு நிர்மாணம் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய தொகையினை உள்ளடக்கியிருந்தது. எனினும் இப்பொறுப்பானது துறைமுக அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்பு இல 28 இற்கு இணங்க மொத்த பொறுப்பும் இலங்கை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. ஆகவே குறிக்கப்பட்ட பொறுப்பினுடைய சரியான மற்றும் நிலைத்திருக்கும் தன்மையானது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

(ii) உள்நாட்டு விளையாட்டு மைதானங்கள் மற்றும் சர்வதேச கிரிக்கெட் அரங்குகளின் நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 19,046,757 தொகையான முற்பணக்கொடுப்பனவு சீராக்கம் செய்யப்படாமல் 5 வருடங்கள் காலப்பகுதிக்கு மேலாக முற்பணக் கணக்கில் இருந்தது.

(iii) விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு பெறுவது தொடர்பான 2006 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதிக்கான ரூபா 1,002,380 தொகையான மீள்நிதியளிக்கக்கூடிய வைப்புக்கள் சரியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் தீர்க்கப்படாமலும் கணக்குகளில் சீராக்கஞ்செய்யப்படாமலும் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(iv) 2008 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் கிரிக்கெட் சங்கங்களுக்கு போட்டிகளுக்காக கொடுக்கப்பட்ட ரூபா 58,269,995 பெறுமதியான முற்பணங்கள் தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் முன் கொண்டு வரப்பட்டது. இதனால் மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கான நிதி விளைவுகள் குறித்த தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(v) ரூபா 13,011,943 பெறுமதியான பெறவேண்டிய அனுசரணை வருமானம் தேறாத வருமானமாக ஐந்து வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாமலும் மற்றும் நிதிக்கூற்றுக்களில் சீராக்கஞ்செய்யப்படாமலும் காட்டப்பட்டிருந்தது.

### (இ) பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின்படி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கொடுக்க வேண்டிய பெறுமதியாக ரூபா 258,347,662 காணப்பட்டது. எனினும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தும் ஆவணத்திற்கேற்ப ரூபா 334,368,499 ஆக காணப்பட்டது. ஆகவே மீளாய்வாண்டின் இறுதியில் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கொடுக்க வேண்டிய தொகையின் சரியான மற்றும் நம்பகத் தன்மையானது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

### (ஈ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(i) முன்னய சில ஆண்டுகளுக்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) விரிவான பட்டோலை மற்றும் வருமான வரி திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 176,750,997 இற்காக உறுதிப்படுத்தும் ஆவணம் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதியினுடைய சரியான தன்மையினை உறுதி செய்து கொள்வதற்கான சான்றுப்படுத்தும் ஆவணங்களாக ரூபா 240,986,347 பெறுமதியான நடைமுறை வேலை சம்பந்தமான ஒப்பந்த உடன்படிக்கை, ஏற்றுக்கொள்ளல் கடிதம் மற்றும் ஆரம்பித்த மற்றும் பூர்த்தியாக்கப்பட்ட திகதிகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(iv) அடையாளம் காணப்படமுடியாத மீதியாகிய ரூபா 5,845,788 2013 ஆம் ஆண்டிற்கு முன்னய ஆண்டிலிருந்து நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ஏனைய முற்கொடுப்பனவுகளாக முன் கொண்டு வரப்பட்டதுடன் 31 டிசெம்பர் 2017 வரைக்கும் தீர்க்கப்படாமல் இருந்தது. ஆகவே மேற் குறிப்பிட்ட அடையாளம் காணப்படமுடியாத மீதியினுடைய சரியான மற்றும் நிலைத்திருக்கும் தன்மையானது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கிரிக்கெட்டின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கிரிக்கெட்டின் நிதி விளைவுகள் ரூபா 2,128,044,081 ஆல் மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 63,962,186 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,064,081,895 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. சர்வதேச கிரிக்கெட்டிடமிருந்தான ரூபா 2,879,626,868 தொகையான வருமானக் அதிகரிப்பு மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சர்வதேச கிரிக்கெட் சபையினுடைய மூன்று வகையான கிரிக்கெட் தரவரிசைக்கு அமைவாக, இலங்கை அணி சம்பந்தமான தகவல்கள் வருமாறு.

| ஆண்டு | ரெஸ்ட் தரவரிசை | சர்வதேச ஒரு நாள் (ஓடீஐ) தரவரிசை | ரீ20 தரவரிசை |
|---|---|---|---|
| 2017 | 7 | 6 | 8 |
| 2016 | 7 | 5 | 8 |
| 2015 | 7 | 5 | 1 |
| 2014 | 6 | 2 | 1 |
| 2013 | 6 | 6 | 1 |

சர்வதேச கிரிக்கெட் சபையினுடைய தரவரிசைக்கு அமைவாக இலங்கை தேசிய கிரிக்கெட் அணியினுடைய செயலாற்றல் முன்னைய நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளது.

### 4.2 முகாமைத்துவ அடைவுகள்

17 உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளப்பெறவேண்டிய ரூபா 1,080,825 உத்தியோகத்தர்கள் கடன் மீதியினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது இலங்கை கிரிக்கெட்டின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) முற்பணக் கொடுப்பனவு | முற்பணங்கள் தொடர்பான கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை இல்லாமை. |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாமை மற்றும் முறையான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளாமை |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | நடைமுறைக் கணக்குகளுக்கிடையிலான பணப் பரிமாற்றங்கள் கட்டுப்பாடுகளின்றி மாற்றப்படுகின்றமை. |